சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. அ. ரமேஷ் பாபு,

ந.க. எண் : 47/2024 நாள் : 29.2.2024.

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திண்டுக்கல் மாவட்டம் – சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி – சேவுகம்பட்டி வருவாய் கிராமம் சர்வே எண்கள். 1140/4C2, 4C3, 5C1A & 5C3 இல் 6094.00 சதுர மீட்டர் (1.495 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 19 மனைகளை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளாச்சித்துறை UD4(3) நாள் 09.12.2020.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் இணையதள கடிதம் ந.க.எண். ALRU3PWG/2024/TCP நாள்.22.1.2024.
4. அய்யம்பாளையம் சார்பதிவக தானப்பத்திர பதிவு எண்.172/2024 நாள்.24.1.2024
5. நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் இணையதள கடிதம் ந.க.எண். ALRU3PWG/2024/TCP நாள்.29.01.2024.
6. சேவுகம்பட்டி பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.23.2024, நாள்.29.2.2024.

*****

உத்திரவு:

திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 1140/4C2, 4C3, 5C1A & 5C3 இல் இல் திரு. மதுரைவாணன் மற்றம் நல்லசாமி, எண்.4/75, தெற்குத் தெரு, செங்கட்டாம்பட்டி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் என்பவருக்கு சொந்தமான 6094.00 சதுர மீட்டர் (1.495 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கும் நிலையில் உள்ளதாகவும், அதன் பொருட்டு சாலை, பொது உபயோகத்திற்கான பரப்பினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து வடிகால் வசதியும் செய்யப்பட்டு அதன் விபரத்தை தெரிவிக்க இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் பார்வை 3 இல் கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மனைப்பிரிவு உரிமையாளரால் சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டிருந்த அளவுகளின்படி பொது உபயோகம் மற்றும் உத்தேச சாலைகளை பார்வை 4ல் காணும் அய்யம்பாளையம் சார்பதிவகம் நன்கொடை ஆவண எண். 172/2024 நாள்.24.1.2024.ன் மூலம் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 5ல் காணும் நகர் ஊரமைப்பு துறை, திண்டுக்கல் மாவட்ட துணை இயக்குநரது கடித்தில் சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 6 ன்படி இசைவு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

..2

நன்கொடை ஆவணங்களின் மூலம் சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட புல எண். 1140/5C3, 1140/4C1, 1140/4C2, 1140/4C3, மற்றும் . 1140/5C1A இல் சாலைகள், மற்றும் பொது இடங்களுக்கு சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் மாற்றம் செய்து வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட பட்டா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 விதி(3) மற்றும் விதி(9)ன்படி உள்ளாட்சி மற்றும் அரசுத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டிய தொகை மனுதாரரால் 20.02.2024ம் தேதி செலுத்தப்பட்டுள்ளது.

<u>இம்மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க மனுதாரரால் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம்</u>

1. பேரூராட்சிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட இடத்தின் பரப்பளவு 24.75 சதுரமீட்டர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. <u>தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ள விபரம்</u>

   சாலைகள் மொத்தம் 2155.20 சதுர மீட்டர் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
3. மனைப்பிரிவு அமைவிடத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது.
4. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
5. மனைப்பிரிவு அமைவிடத்தில் குடிநீர் விநியோக பயன்பாட்டிற்கு தேவையான ஆழ்குழாய் கிணற்றுடன் மின் மோட்டார் பொருத்த உரிய தொகை பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.
6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக கேட்பின்படி தொகை மனைப்பிரிவு உரிமையாளரால் நேரடியாக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரது இணையதள கடிதம் ந.க.எண். ALRU3PWG/2024/TCP நாள்.29.01.2024 இன் அனுமதி/ இசைவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் நிபந்தனைகளில் காணும் அடிப்படை வசதிகள் மற்றும் கட்டணங்கள் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட சேவுகம்பட்டி வருவாய் கிராம எண்கள் 1140/4C2, 4C3, 5C1A & 5C3 இல் 6094.00 சதுர மீட்டர் (1.495 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 19 மனைகளுக்கு திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது பார்வை 5ன்படி மேற்படி மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, மேற்காணும் அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, பார்வை 6ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்காணும் மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி முதல் நிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.

இணைப்பு :

- வரைபடம்.

பெறுநர் :

திரு. மதுரைவாணன் மற்றும் நல்லசாமி,
எண்.4/75, தெற்குத் தெரு, செங்கட்டாம்பட்டி,
நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் .

நகல் :

- நகர் ஊரமைப்புத்துறை, மதுரை மண்டல துணை இயக்குநருக்கு தகவலுக்காக.
- நகர் ஊரமைப்புத்துறை, திண்டுக்கல் மாவட்ட உதவி இயக்குநருக்கு தகவலுக்காக.
- திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை திண்டுக்கல் வட்டம், திண்டுக்கல்.
- சார்பதிவாளர், அய்யம்பாளையம் சார்பதிவகம்.
- இருப்பு கோப்பிற்கு.